


**11.10.2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான சாலை, ரயில், துறைமுக மேம்பாட்டு பணிகளை சென்னை ஐஐடி வளாகத்தில் இன்று தொடங்கிவைத்தார்.

போக்குவரத்து இணைப்பை மேம்படுத்தி தொழில் வர்த்தகத்தை வலுப்படுத்த இப்புதிய திட்டங்கள் வழிகோலும் என்று பிரதமர் அப்போது கூறினார்.

2. கோவை மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. தூத்துக்குடி மாவட்டம் குலசேகர பட்டினம் முத்தாரம்மன் திருக்கோவில் தசரா திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

4. இந்திய - வெஸ்ட் இண்டிஸ் அணிகளுக்கு இடையேயான 3-வது 20-20 கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

************

<u>பிரதமர்</u>

அறிவியல் மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சியால் நாடு மேம்பட்டு வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சென்னை ஐஐடி வளாகத்தில் 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான சாலை, ரயில், துறைமுக மேம்பாட்டு பணிகளை தொடங்கிவைத்து பேசிய பிரதமர், இன்று தொடங்கப்பட்ட திட்டங்கள் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்தி தொழில் மற்றும் வர்த்தகத்தை வலுப்படுத்தும் என்றார்.

இதன் மூலம் தமிழக இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாவதோடு தமிழக மக்களின் வாழ்க்கை தரமும் மேம்படும் என்றார்.

நாட்டின் மின்னணு ஏற்றுமதி பன்மடங்கு உயர்ந்துள்ளதாக கூறிய பிரதமர், செல்ஃபோன் ஏற்றுமதியில் உலகின் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

சிறப்பான போக்குவரத்திற்கு நகரங்களின் கட்டமைப்பின் அவசியத்தை வலியுறுத்திய பிரதமர், இத்தகைய திட்டங்களின் மூலம் மக்களின் பயணம் எளிதாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட பழனி, வேலூர் கண்டோன்மென்ட், அம்பாசமுத்திரம், பரமக்குடி நாமக்கல் ரயில் நிலையங்களை பிரதமர் திறந்துவைத்தார்.

தமிழகத்தில் கடல்சார் உள்கட்டமைப்பை வலுப்படுத்தவும், சரக்கு கையாளும் திறனை அதிகாரிக்கும் வகையிலும் தூத்துக்குடி வ.உ.சி துறைமுகம் உட்பட 282 கோடி ரூபாய் மதிப்பிலான துறைமுகம் தொடர்பான பல்வேறு திட்டங்களையும் பிரதமர் தொடங்கிவைத்தார்.

சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் நிறுவனத்தின் மணலி சுத்திகரிப்பு நிலையத்தில் ஆயிரத்து 620 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கும் அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து ஜெயகோபால் கரோடியா பள்ளி பொன்விழா கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு செயற்கை நுண்ணறிவு மற்றும் அட்டல் ஆய்வகத்தை தொடங்கிவைத்து பேசிய பிரதமர் நம் நாட்டு இளைஞர்கள் வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கிற்கு வலுவூட்ட விரும்புவதாக கூறினார்.

உலகளாவிய சவால்களுக்கான தீர்வுகள் மாணாக்கரிடம் உள்ளதாக குறிப்பிட்டார்.

நம் தேசத்தின் எதிர்காலம் மாணாக்கரின் கையில் உள்ளதாக கூறிய பிரதமர் 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த தேசமாக அனைவரும் உறுதி ஏற்க அழைப்பு விடுத்தார்.

மாணாக்கர் நாடுமுழுவதும் பயணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட பிரதமர் விளையாட்டு துறையில் நம் நாடு புதிய உச்சத்தை எட்டும் என்று குறிப்பிட்டார்.

செல்லும் இடமெல்லாம் நம் தேசத்தின் கலாச்சாரத்தை மாணவர்கள் கொண்டு செல்ல வேண்டும் என்றும் பிரதமர் திரு.நரேந்திரமோடி மாணவர்களை அறிவுறுத்தினார்.

முன்னதாக சென்னை போரூர் மெட்ரோ ரயில் நிலையத்தில் 4 ஆயிரத்து 900 கோடி ரூபாய் மதிப்பிலான பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரயில், சேவையை தொடங்கிவைத்த பிரதமர், போரூர் - பூந்தமல்லி இடையே மெட்ரோ ரயிலில் முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய்யுடன் இணைந்து பயணித்தார்.

அதனை தொடர்ந்து சென்னை ஐஐடி வளாகத்தில் உள்ள ஜலகண்டேஸ்வரர் கோவிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

பின்னர் அங்குள்ள சுதா கோபால கிருஷ்ணன் மூளை ஆராய்ச்சி மையத்தை நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

சென்னை ஐஐடி வளாகத்தில் ஸ்டார்ட் அப் நிறுவனர்களுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

************

<u>நாமக்கல்</u>

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் நாமக்கல் ரயில் நிலையம் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மறு சீரமைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

<u>வேலூர்</u>

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் வேலூர் கண்டோன்மென்ட் ரயில் நிலையம் மறுசீரமைக்கப்பட்டு இன்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது மகிழ்ச்சி அளிப்பதாக பயணி ஒருவர் தெரிவிக்கையில்

வாய்ஸ்

************

<u>முருகன்</u>

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் மக்கள் சேவையில் 25 ஆண்டுகளாக சிறப்பாக பங்காற்றி வரும் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசின் முன்முயற்சிகளால் நாட்டில் தற்போது இரண்டரை லட்சம் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

வறுமை கோட்டிற்கு கீழ் இருந்த 25 கோடிக்கும் மேற்பட்ட மக்களின் வாழ்வாதாரம் தற்போது மேம்பட்டுள்ளதாக கூறினார்.

************

<u>விஜய்</u>

முன்னதாக இந்நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் திரு.விஜய் நாட்டின் தொழில் மேம்பாடு, அறிவியல், கல்வி முன்னேற்றத்திற்கு தமிழகம் சிறப்பான பங்களிப்பை வழங்கும் என்றார்.

தமிழக இளைஞர்களுக்கு உலக அளவிலான வேலை வாய்ப்புகளை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், ஒன்றரை ட்ரில்லியன் வளர்ச்சி இலக்கை நோக்கி தமிழகம் பயணித்து வருவதாக தெரிவித்தார்..

கோவை மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

சென்னை - திருச்சி, திருச்சி – கரூர், கரூர் – கோவை 6 வழி சாலையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்,

ஓசூர் – பெங்களூரு இடையேயான மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளையும் முதலமைச்சர் பிரதமரிடம் கேட்டுக்கொண்டார்.

************

<u>சேவா சங்கல்ப்</u>

பிரதமர் திரு.நரேந்திரமோடி 25 ஆண்டுகள் பொது வாழ்க்கையை நிறைவு செய்துள்ள நிலையில், வளர்ச்சி அடைந்த பாரதப் பாதை என்ற பிரதமரின் தொலைநோக்கு பயணத்தின், மக்கள் சேவை உறுதிமொழி இயக்கத்தின் ஒருபகுதியாக, பத்ம விருதுகளுக்கான தேர்வு நடைமுறை வெளிப்படைத்தன்மையுடனும், ஜனநாயக முறைப்படியும் மாற்றப்பட்டது குறித்த செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

நாட்டின் மிக உயரிய விருதான பத்ம விருதுகளுக்கான தேர்வு நடைமுறையில் 2014-ஆம் ஆண்டிற்கு பின்னர் விரிவான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

நாட்டின் எந்த ஒரு குடிமகனும் தகுதியான ஒருவரை இவ்விருதுக்கு பரிந்துரைக்க முடியும்.

மேலும் மக்கள் தங்களையே பரிந்துரைத்துக்கொள்ளும் வாய்ப்பும் தற்போது நடைமுறையில் உள்ளது.

இப்பரிந்துரைகள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

இந்த சீர்திருத்தங்களின் மூலம் பத்ம விருதுகள் ஒரு குறுகிய வட்டத்திற்குள் அல்லாது மக்கள் விருதாக மாற்றியுள்ளது.

மேலும் தொலைதூர கிராமப்புறங்கள் மற்றும் விளிம்பு நிலை மக்கள், சிறப்பான பணிகளை செய்து வரும் அறியப்படாத சேவகர்களை கவரவிப்பதில் புதிய அளவுகோலை இவை உருவாக்கியுள்ளன.

இந்த சீர்திருத்தங்கள் மூலம் பத்ம விருதுகள் தற்போது மக்களுக்கான விருதாக மாறியுள்ளதாக பிரதமர் மனதின் குரல் நிகழ்ச்சியில் கூறியது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் உண்மையான சேவகர்களுக்கு அங்கீகாரம் கிடைப்பதை உறுதி செய்ய மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நாட்டுப்புற கலைஞர்கள் விவசாயிகள் பல்வேறு துறைகளை சேர்ந்தவர்கள் உள்ளிட்ட நம் கலாச்சாரத்தை மேம்படுத்த சேவை செய்பவர்களுக்கு ஆண்டுதோறும் இவ்விருது அளிக்கப்படுகிறது.

இந்த சீர்திருத்தங்கள் மூலம் எந்த ஒரு துறையிலும் சிறப்பான பணியாற்றுபவர்கள் தற்போது பத்ம விருதை பெற முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக தேசிய கல்லூரி பேராசிரியர் டாக்டர் ஸ்ரீவித்யா தெரிவிக்கையில்

வாய்ஸ்

************

<u>தன்தானியம்</u>

பிரதமரின் வேளாண் வளர்ச்சிக்கான தன்தானிய திட்டம் தொடங்கப்பட்டு இன்றுடன் ஓராண்டு நிறைவடைகிறது.

நாடுமுழுவதும் 100 மாவட்டங்களில் 11 அமைச்சகங்கள் மற்றும் பல்வேறு துறைகளின் கீழ் 36 மத்திய மாநில அரசு திட்டங்கள் மற்றும் தனியார் துறைகளை

ஒருங்கிணைத்து விவசாயத்தை வலுப்படுத்தும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்மூலம் விவசாயிகளின் வேளாண் உற்பத்தி திறன், சந்தை அணுகல், வருமானத்தை அதிகரிப்பது உள்ளிட்டவைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

************

சர்வதேச பெண் குழந்தைகள் தினம்

சர்வதேச பெண் குழந்தைகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் வெளியிட்டுள்ள செய்தியில் பெண் குழந்தைகளுக்கு உடல் நலம், கல்வி, பாதுகாப்பு, சுதந்திரம், ஆகியவற்றை உறுதி செய்வது அனைவரின் கடமையாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பாகுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்க நாம் அனைவரும் உறுதி ஏற்போம் என்றும் அவர் கூறியுள்ளார்.

************

நிர்மல் குமார்

தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவையான அனைத்து வசதிகளும் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டுள்ளதாக மாநில மின்துறை அமைச்சர் திரு.நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தங்க மோதிர திட்டம் மிகவும் பயனளிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் 70க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு அவர் பட்டா வழங்கினார்.

************

தூத்துக்குடி தசரா

தூத்துக்குடி மாவட்டம் குலசேகர பட்டினம் அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோவில் தசரா திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இவ்விழாவை ஒட்டி பக்தர்கள் பல்வேறு வேடங்கள் அணிந்து நேர்த்தி கடன் செலுத்துவது வழக்கம்

விழாவின் முக்கிய நிகழ்வான மகிஸாசுர சம்ஹாரம் வரும் 20ஆம் தேதி நள்ளிரவு நடைபெறுகிறது.

************

நெல்லை தசரா

நெல்லை பாளையங்கோட்டையில் தசரா விழாவின் முதல் நாளான இன்று, முத்தாரம்மன் உள்ளிட்ட 12 அம்மன் சப்பர ஊர்வலம் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

நவராத்திரி

நவராத்திரி பண்டிகை நாடுமுழுவதும் இன்று பக்தி சிரத்தையுடனும் கோலாகலமாகவும் தொடங்கியது.

9 நாட்கள் நடைபெறும் இவ்விழாவின் ஒருபகுதியாக திருக்கோவில்கள் மற்றும் இல்லங்களில் மக்கள் கொலு அமைத்து கொண்டாடி வருகின்றனர்.

குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், வெளியிட்டுள்ள செய்தியில் அனைவரது வாழ்விலும் தைரியம் மற்றும் ஞானத்தை இவ்விழா கொண்டுவரட்டும் என வாழ்த்தியுள்ளார்.

நாட்டு மக்கள் அனைவரும் பொறுமை மற்றும் தன்னம்பிக்கையுடன் வாழ பிரதமர் வாழ்த்தியுள்ளார்.

************

இருவரி

மயிலாடுதுறை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணியாற்றியவர்கள் தமிழக அரசின் விருது பெற வரும் 22ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

பெரம்பலூர் மாவட்டம் சமூகநல அலுவலகத்தில் முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதிர்வு தொகை பெற வேண்டிய பயனாளிகளின் விவரம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. அப்துல் ராஸிக் தெரிவித்துள்ளார்.

தமிழில் முதல் புதின எழுத்தாளரும், நீதிபதியுமான மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் 200-ஆவது பிறந்த நாளை ஒட்டி மயிலாடுதுறையில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலைக்கு தமிழ் அறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

************

விளையாட்டு

நாமக்கல் மாவட்டம் கீரம்பூரில் தென்னிந்திய அளவிலான வில்வித்தை சேம்பியன் பட்ட போட்டிகள் இன்று நிறைவடைகின்றன.

பல்வேறு மாநிலங்களை சேர்ந்த 160க்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இப்போட்டியில் வெற்றிபெறுவோர் வரும் டிசம்பர் மாதம் மலேசியாவில் நடைபெறும் சர்வதேச வில்வித்தை சாம்பியன் பட்ட போட்டிக்கு தகுதிபெறுவர்.

************

கிரிக்கெட்

இந்திய வெஸ்ட் இண்டிஸ் அணிகளுக்கு இடையேயான 3-வது 20-20 கிரிக்கெட் போட்டி இந்தோரில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்றுள்ளன.

************